மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சொன்னால் வருத்தப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: புயல் அடிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். புயல்போன்று ஏதாவது அடித்து, அதனால் ஏதாவது சீர்குலைவு ஏற்பட்டதா? சீர்குலைவை சீரமைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: புயலினால் சீர்குலைவு ஏற்படவில்லை. காற்று என்பது, காற்று, பெருங் காற்று, புயல், கடும் புயல், என்று நான்கு வகையாகப் பிரிக்கப்படும் அன்று கொஞ்சம் வேகமாக காற்று அடித்தது. எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை.

கைக்குத்தல் அரிசி தயாரிப்புத் தொழிற்சாலை

*809 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நமது மாநிலத்தில் கைக்குத்தல் அரிசி தயாரிப்பதற்காக தொழிற்சாலை ஏதேனும் தற்போது உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கைக்குத்தல் அரிசி தயாரிக்கும் கூட்டுறவுக் கழகங்கள் 129 உள்ளன.

திருமதி த. ந. அனந்தநாயகி: கூட்டுறவுக் கழகங்களெல்லாம் லாபத்தில் நடைபெறுகின்றனவா? கைக்குத்தல் அரிசிக்கு மக்களிடையே அதிக தேவை இருக்கிறது என்று ஏதாவது இந்த அரசாங்கத்திற்கு தெரியவந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இதில் உள்ள 81 கூட்டுறவுக் கழகங்கள் நஷ்டத்தில் நடைபெறுகின்றன. 25 லாபத்தில் நடைபெறுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the fact that handpounded rice is supposed to be healthier, is there any proposal with the Government to encourage hand-pounding by co-operative societies and arranging marketing organisations so that people will know where to buy and how to get it?

The Hon. THIRU SI. PA. ADITANAR: Sir, most of the handpounded rice is now not sold to the public; it is sold to the jails, hospitals and hostels; at the moment, the requirements of jails, hospitals and hostels are being met by the hand-pounding of paddy societies.